# Fernando Zóbel ஃபெர்னாண்டோ சோபெல்: ஒழுங்கு இன்றியமையாதது.

*Order* is *Essential*

## முன்னுரை

ஃபெர்னாண்டோ சோபெல் (Fernando Zóbel) (1924—1984) ஒரு தீவிரப் பயணி ஆவார், அவர் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற எண்ணம் கொண்டவர் மற்றும் அவர் ஓர் எழுத்தாளரும் கூட, மேலும் அவர் பிலிப்பைன்ஸ் மற்றும் ஸ்பெயினில் இரண்டு புதுப்பாணியியல் ஓவியக் கலைக்கூடங்களை நிறுவிய முன்னோடிக் ஓவியச் சேகரிப்பாளரும் ஆவார். பிலிப்பைன்ஸில், ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஸ்பானியக் குடும்பத்தில் பிறந்த சோபெல் தன் வாழ்நாள் முழுவதும் உலகின் மீது பேரார்வம் கொண்டிருந்தார்,  அது வரைதல், அச்சு தயாரித்தல், ஓவியம் தீட்டுதல் மற்றும் புகைப்படக்கலை ஆகியவற்றில் அவரது வெளிப்பாட்டியல் மற்றும் சுருக்கவியல் பாணியை வார்த்தெடுத்தது

இவ்வோவியக் கண்காட்சி, சோபெல்லுடன் சேர்ந்து வட அமெரிக்கா, ஆசியா மற்றும் ஐரோப்பாவிற்கு உங்களைப் பயணிக்க அழைக்கிறது, 1940களிலிருந்து 1980கள் வரை அவர் அங்குச் செயல்பட்டுக் கொண்டிருந்தார். ஓவிய வரலாற்றின்

மீதும் அமெரிக்கச் சுருக்க வெளிப்பாட்டியலின் மீதும் அவர் கொண்டிருந்த ஈர்ப்பை நீங்கள் பாஸ்டன் (Boston) மற்றும் ரோட் (Rhode) தீவில் காண்பீர்கள்; மருந்துபீச்சு ஊசிக்குழலை ஓவியந்தீட்டும் கருவியாகப் பயன்படுத்த முயன்றதை நீங்கள் மணிலாவில் (Manila) காணலாம்.; வெண் கித்தானில் கறுப்பு நிறத்தைப் பயன்படுத்தி திறம்படச் செய்த ஓவியக்கோர்ப்பை மாட்ரிடில் (Madrid) காணலாம்; குயென்காவின் (Cuenca) இயற்கைக்காட்சிகளுக்கான அவரின் மரியாதையையும் காணலாம். அவர் உலகம் முழுவதும் பயணித்த தடங்களைப் பின்தொடரும்போது, புதுப்பாணியியல் ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொரு காலத்திலும் எவ்வாறு வேறுபட்ட வடிவங்களை எடுத்துக்கொண்டது என்பதை நம்மால் காண முடியும். அவர் மையம் மற்றும் விளிம்பு, கடந்த காலம் மற்றும் எதிர்காலம் என்ற இருமையைக் கடந்தார்.

கண்டம்செல் பயணியான சோபெல் “ஒழுங்கு இன்றியமையாதது” என்று ஒருமுறை கூறினார். இக்கூற்று, அவரது ஓவியம்சார் பார்வையில் காணப்படும் உயிர்ப்பான பாவனையையும், ஆழமான சிந்தனையின் ஒழுங்கையும் பிரதிபலிக்கிறது. அவரின் படைப்புகளில், கட்டமைப்பில் கொண்டுள்ள நம்பிக்கை என்பது சுவடு மற்றும் நினைவுகளின் மீதான நம்பிக்கைக்குச் சமமாக ஒத்திருக்கிறது. இக்கண்காட்சி, ‘சோபல்: கடந்த காலத்தின் எதிர்காலம்’ (‘Zóbel: The Future of the Past’) எனும் படைப்புத் திட்டப்பணியைப் பின்பற்றுகிறது. அது முதலில் 2022 ஆம் ஆண்டில் மாட்ரிடிலுள்ள பிராடோ (Prado) தேசிய அரும்பொருளகத்தில் தொடங்கப்பட்டு,

பின்னர் 2024 ஆம் ஆண்டில் மணிலாவின் அயலா (Ayala) அரும்பொருளகத்தில் மீண்டும் நடத்தப்பட்டது.

## பித்துபிடித்த இத்துறவியின் வாழ்க்கையின் பாதி

ஓவிய வரலாற்றில் மயங்கிய சோபெல், வின்சென்ட் வான் கோவின் (Vincent van Gogh) 'சைப்பிரஸ் மரத்துடன் கூடிய ஒரு கோதுமை வயல்' (A Wheatfield with Cypresses) என்ற 1889 ஆம் ஆண்டு படைப்பைத் தனது சொந்தப் பாணியில் மீண்டும் உருவாக்கினார். ஒளிர்நிறங்களிலும், உயிர்ப்புகொண்ட தூரிகையடிப்புகளாலும் வரையப்பட்டிருக்கும், வேன் கோவின் வேலைப்பாடு பற்றிய அவரது கருத்து, வெளிப்பாட்டியல் பாணிக்கு பதிலளிக்கும் அவரது தொடக்க முயற்சியைக் குறித்தது. இத்தொடக்கம் அவரது இறுதிப் படைப்போடு உரையாடுகிறது - ஸ்பெயினில் உள்ள அவரது படைப்பகத்தில் (studio) உள்ள வரைபலகைச் சட்டகத்தில் (easel) காணப்படுகிறது, இஃது அவர் வாழ்ந்த நகரத்தில் ஓர் ஆற்றின் மீது ஒரு பாலம் இருப்பதை நினைவூட்டுகிறது. காலத்தால் பிரிக்கப்பட்டிருந்தாலும், இவ்விரண்டு படைப்புகளும் கடந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் இடையிலான சோபெல்லின் நீடித்த உரையாடலைக் குறிக்கின்றன. சோபெல் ஓவியத்தில் நேரத்தைப் பற்றியும், ஓவியவியல் இயக்கத்தில் காலத்திற்கேற்ற தன்மையைப் பற்றியும் ஆழமாகச் சிந்தித்தார். அவரது குறிப்பேடு ஒன்றில், காலத்தின் "வடிவம்" குறித்த கோட்பாட்டாளரான

ஓவிய வரலாற்றாசிரியர் ஜார்ஜ் குப்லரின் (George Kubler) மேற்கோள் ஒன்றை அவர் பதிவு செய்திருந்தார், அது "முன்னோடி ஒரு புதிய பண்பாட்டை வடிவமைக்கிறார்; கிளர்ச்சியாளர் சிதைந்துபோகும் ஒன்றின் விளிம்புகளை வரையறுக்கிறார்" என்பதாகும். புதியதை வடிவமைக்கும் முன்னோடி மற்றும் மறைந்துபோகும் நிகழ்காலத்தின் விளிம்புகளை வரையறுக்கும் கிளர்ச்சியாளர் ஆகிய இரு பாத்திரங்களையும் சோபெல் உள்ளடக்கியிருந்தார். வேன் கோவின் (Van Gogh) படைப்பை மறுவரைவு செய்தது முதல் அவரது அசல் ஓவிய நடுக்கரு வரை, இரண்டின் பார்வையிலக்குகளையும் அவர் செய்துமுடித்தார்.

## ஒவ்வொரு செம்மைப்படுத்தலுடனும்

1946இல், ஃபெர்னாண்டோ சோபெல், அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் (Harvard University) வரலாறும் இலக்கியமும் பயிலச் சென்றார். அங்கு, ஸ்பானிய நாடகாசிரியர் பெடெரிகோ கார்சியா லோர்காவின் (Federico García Lorca) படைப்புகளில் அவர் கவனம் செலுத்தினார். லோர்காவின் “தோட்டத்தில் டான் பெர்லிம்ப்ளினுக்கும் பெலிசாவினுக்குமான காதல்” (Amor de Don Perlimplín con Belisa en su jardín) என்ற நகைச்சுவை நாடகத்துக்கு உருவங்களை வரைந்ததுடன், அவரது நாடகங்களில் காணப்படும் கருப்பொருள்கள் மற்றும் முரண்பாடுகளை ஆய்வுக்கட்டுரையாக எழுதினார்.

சோபெல் பல்கலைக்கழகச் சமூக வாழ்க்கையிலும் சுறுசுறுப்பாக ஈடுபட்டார்—'Fox Club'க்கு ஒரு சுவரோவியம் வரைந்தார், கேலிச்சித்திரங்கள் வரைந்தார், அச்சுப்பணிக் கலைஞர்கள் மற்றும் நூலகர்களுடன் இணைந்து பணியாற்றினார். ஜிம் ப்ஃபொய்ஃபர் (Jim Pfeufer), ரீட் சாம்பியன் (Reed Champion), ஜாக் லெவின் (Jack Levine), ஹைமன் ப்ளூம் (Hyman Bloom) போன்ற பாஸ்டன் (Boston) பகுதியின் ஓவியர்களுடன் பழகினார்; டெல்மோர் ஸ்வார்ட்ஸ் (Delmore Schwartz), ஸ்டீபன் ஸ்பெண்டர் (Stephen Spender) போன்ற கவிஞர்களுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். அவரது உறவினரும் ஓவியரும் கூறுதிரட்சிக் கலைஞருமாகிய (assemblagist) அல்ஃபோன்சோ ஒசோரியோவுடன் (Alfonso Ossorio) அவர் கடிதங்கள் பரிமாறினார்.

ரோட் (Rhode) தீவின் வடிவமைப்புப் பள்ளியில் பயிலும் போது, 1955இல் மார்க் ரோத்கோவின் (Mark Rothko) ஓவியக் கண்காட்சியை சோபெல் பார்த்தார், அஃது அவரை "முழுமையாக மயக்கியிருந்தது".

அமெரிக்காவில் இருந்தபோதே, அவர் ஒரு தொழில்முறை ஓவியராக உருவாகியதற்கான தொடக்கத்தைக் கண்டார். முதலில் பண்பாடு மற்றும் ஓவிய வரலாற்றின் மாணவனாகத் தன்னை வடிவமைத்தார்; பின்னர், மார்க் ரோத்கோ (Mark Rothko), பிரான்ஸ் க்லைன் (Franz Kline) போன்ற உடனிருந்த ஓவியர்களிடமிருந்து கற்றுக்கொண்டு, நையாண்டி (satire) முதல் பௌஹாஸ் (Bauhaus) மற்றும் புகைப்படக்கலை வரை பரந்துபட்ட ஓவியப் போக்குகளிடையில்

தனது கற்பனையை விரிவுபடுத்தினார்.

## நிறத் தளத்தில் நுண்ணிய கோடுகள்

1950களில், பொருள் சார்ந்த துல்லியத்தைக் புறக்கணிக்கும் பொருட்தன்மை-சாரா (non-objective) ஓவியப்பாணிக்கு மணிலா நகரம் நகர்ந்த போது, ஃபெர்னாண்டோ சோபெல் அந்நகரிலுள்ள புதுப்பாணியியலின் முன்னணி ஓவியராக விளங்கினார். ஹென்றி மத்தீஸின் (Henri Matisse) செயல்நெறியை அடிப்படையாகக் கொண்டு, அவர் கனவடிவியல் (cubism) மற்றும் முறைசாராயியல் பாணிகளில் ஆய்வுமுயற்சிகளைச் செய்தாலும், பிலிப்பைன்ஸ் நாட்டின் பண்பாட்டுடனும், பொருள்வடிவங்களுடன் தனது பண்பாட்டுறவைக் கடைபிடித்தார். தூய உள்ளுணர்வை விட முன்முடிவுசெய்யப்பட்ட கட்டமைப்பை அவர் வலியுறுத்தினார்.

இம்மரபுகளில் இருந்து, Carroza என்கிற குதிரைவண்டி அல்லது மத ஊர்வல வண்டி போன்ற முக்கியக் கொள்கைகள் மற்றும் பதிவுருவுகளைக் (motifs) சோபெல் பிரித்தெடுத்தார். அவரது உடன்செயல்படும் புதுப்பாணியியல் ஓவியர்கள் சோபெல்லை ஓர் அன்பான ஆவி போன்றவர், ஒரு புரவலர் மற்றும் ஒரு ஆதரவாளர் எனக் கண்டனர். அவர் பிலிப்பைன்ஸ் ஓவியச் சங்கத்திற்கு இரண்டு முறை தலைமை தாங்கினார், பிலிப்பைன்ஸ் கலைக்கூடத்தில்

காட்சிப்படுத்தினார் மற்றும் பிலிப்பைன்ஸ் புதுப்பாணியியலின் முன்னணிப் புகழாளர்களுடன் இணைந்து பணியாற்றினார்.

அவர் தாராளமாக ஓவியங்களைச் சேகரித்து, தனது சேகரிப்பிலிருந்த அப்படைப்புகளை 1960 ஆம் ஆண்டு மணிலாவின் அதெனியோ பல்கலைக்கழகத்திற்கு நன்கொடையாக வழங்கினார், இதன் மூலம் பிலிப்பைன் புதுப்பாணியியல் ஓவியத்தின் முதல் அரும்பொருளகமான அதெனியோ கலைக்கூடத்தை உருவாக்கினார்.

தனது சர்வதேசக் கண்ணோட்டத்திற்கு ஏற்ப, அவர் புதுப்பாணியியல் மற்றும் "கிழக்கத்திய" ஓவிய வகுப்புகளையும் கற்பித்தார், மூனகட்டா ஷிகோ (Munakata Shiko) போன்ற ஆசிய ஓவியர்களின் ஓவியங்கள் மற்றும் கையெழுது அழகெழுத்துப் (calligraphy) படைப்புகளைச் சேகரித்தார். மேலும், ஜப்பானிய வடிவமைப்பில் கட்டப்பட்ட வீட்டில் வசித்தார்.

மணிலாவில் இருந்தபோது, சோபெல் வழக்கமான மருந்துபீச்சு ஊசிக்குழலைப் (ஊசி இல்லாத) புதுமையாக மாற்றிப் பயன்படுத்தினார்—நீளமான தொடர்ச்சியான கோடுகளாக நிறப்பூச்சைக் கட்டுப்படுத்தவும், அதனை தளத்தில் பரப்பவும் அம்முறையைப் பயன்படுத்தினார். இவ்வுத்தி முதன்முறையாக அவர் “Saeta” என அழைத்த ஓவியத்தொடரின் ஓவியங்களில் காணப்பட்டது—அஃது ஓர் அம்பு, ஒரு பாடல், ஒரு சாரக்கட்டு, ஒரு ‘கேக்’ (cake) மீது அலங்கரிக்கப்படும் ‘ஐசிங்’

(icing) அல்லது ஒரு மணல் தோட்டத்தை நினைவூட்டக்கூடியது.

இஃது ஒரு தனித்துவமான சாதனை, புதுப்பாணியியல் ஓவியக் கோவைக்கு சோபெல் வழங்கிய முக்கியப் பங்களிப்பாகவும் அமைந்தது.

## தனக்குள்ளேயே முரணைக் கொண்ட அசைவுப் பண்பு

1961இல், ஃபெர்னாண்டோ சோபெல் மாட்ரிடில் தங்கினார். அங்கு அவர் தன்னுடைய சுருக்கவியலை நிறத்தொனிகளில் ஏற்ற இறக்கம் செய்தும், கட்டகங்கள் மூலமும் மேலும் விரிவுபடுத்தினார். அவரது ஓவியச் செயல்பாடுகள் சர்வதேசக் கவனத்தைத் தொடர்ந்து ஈர்த்து வந்தன. ஏற்கனவே, 1960இல், அவர் நியூயார்க்கிலுள்ள சாலமன் ஆர். குகன்ஹெயம் (Solomon R. Guggenheim) அரும்பொருளகத்தில் இடம்பெற்ற ஸ்பானிய ஓவியக் கண்காட்சியில் பங்கேற்றிருந்தார்; 1962இல், வெனிஸ் (Venice) ஈராண்டுமுறைக் கண்காட்சியின் ஸ்பானிய மாடத்தில் (pavilion) பங்கேற்றதுடன், டேட் (Tate) கலைக்கழகத்தில் நடைபெற்ற ஸ்பானிய புதுப்பாணியியல் ஓவியக் கண்காட்சியிலும் அவர் பங்கேற்றார்.

இக்காலக்கட்டத்தில், அவர் உருவாக்கிய கறுப்புத் தொடர் (Serie Negra) ஓவியங்கள் குறிப்பிடத்தக்கவை—வெண் கித்தானில் கறுப்பு வண்ணப்பூச்சு பூசுவது அல்லது

கறைபடுத்துவது போன்ற ஓர் ஓவியத் தொடர் அஃது - இஃது அழகெழுத்து அல்லது முறைசாரா ஓவிய இயக்கத்தின் பாணியில் வரையப்பட்டது.

இப்படைப்புகளைக் குறிப்பிடத்தக்கதாக மாற்றுவது என்னவென்றால், ஒட்டுமொத்தக் கறுப்பு-வெள்ளை படத்திற்கும் தொனியின் நுட்பமான தணிப்புகளுக்கும் இடையிலான கூர்மையான வேறுபாடு, இஃது உலர் தூரிகை நுட்பத்தின் மூலம் அடையப்படுகிறது, இது தூரிகையின் திசையை மங்கலாக்கி, சமிக்ஞை செய்கிறது.

சுருக்கவியலிலும் அதன் பல்வேறு வகைகளிலும் தனக்கிருந்த பெருந்திறனில் இருந்த நம்பிக்கையின் காரணமாக, சோபெல் ஐரோப்பிய மற்றும் வட அமெரிக்க ஓவிய வரலாற்றில் இருந்த ஓவியர்களுடன் தனது உரையாடல்களைத் தொடர்ந்தார்.

அவர் லொரன்சோ லொட்டோ (Lorenzo Lotto) முதல் ஜான் சிங்கர் சார்ஜென்ட் (John Singer Sargent) வரை பலரின் படைப்புகளை அரும்பொருளகங்களிலும் நூல்களிலும் ஆய்வு செய்தார். அவர்களது வடிவப்பண்புகளைத் தனது ஓவியங்களில் பயன்படுத்தியதுடன், ஓவிய வரலாற்றையும் சுருக்கவியலையும் மறுபரிசீலிக்க தனது தனிச்சிறப்பான பார்வைமுறையைப் பயன்படுத்தினார்.

## ஓவியத்தின் ஒளி

1950களில் இருந்தே, சோபெல் தனது ஓவியச் சேகரிப்பிற்கென ஓர் அரும்பொருளகம் உருவாக்கும் எண்ணத்தில் இருந்தார். 1963இல், மாட்ரிட் (Madrid) நகரத்துக்கு வெளியே அமைந்த குயென்கா (Cuenca) நகரை அவர் வந்தடைந்தார். அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நகரத்தின் இயற்கைக் காட்சிகளும், நடுநூற்றாண்டுக் கோட்டைகளும் அவரை ஆழமாகக் கவர்ந்தன.

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, 1966இல், அவர் ஓவியர் குஸ்தாவோ தொர்னருடன் (Gustavo Torner) இணைந்து, குயென்காவில் ஸ்பானியச் சுருக்கவியல் ஓவிய அரும்பொருளகம் (Museo de Arte Abstracto Español) எனும் திட்டப்பணியைத் தொடங்கினார். ஒரு குன்றின் மீது அமைந்திருக்கும் மற்ற வீடுகளுடன் கூட்டாக, தொங்கும் வீடுகள் (Casas Colgadas) என அழைக்கப்படும் அந்த அரும்பொருளகம், போருக்குப் பிந்தைய ஸ்பானிய புதுப்பாணியியல் ஓவியத்துக்கான அர்ப்பணிப்பாக இருந்தது.

நியூயார்க்கில் உள்ள புதுப்பாணியியல் ஓவியத்துக்கான அருங்காட்சியகத்தின் நிறுவன இயக்குநர் அல்ஃபிரட் பார் (Alfred Barr), இதனை “உலகின் அழகான சிறிய அரும்பொருளகம்” எனப் புகழ்ந்தார்.

குயென்காவில் தங்கியிருந்த காலத்தில் சோபெல், அவர் “காட்சி” (La Vista) என

அழைத்த பள்ளத்தாக்கு, பள்ளத்தாக்கின் வீடுகள், மேடுகள், ஜூகார் (Júcar) மற்றும் ஹுயுகார் (Huécar) ஆறுகளும், அவற்றின் கரைகள் என தன்னைச் சுற்றி தான் பார்த்தவைகளை நுணுக்கமாக வரைந்தார்.

இவ்வரையறுக்கப்பட்ட வெளிக்காட்சிகளிலிருந்து, இரண்டு தொடர்கள் உருவாயின: காட்சி (La Vista) மற்றும் வெள்ளைத் தொடர் (Serie Blanca) என்பன அவை. இவற்றில் சோபெல், ஓவியத்தைப் பொறுத்தவரை வரைதலும் நிறமும் எவ்வாறு இடம்பிடிக்கின்றன என்பதை ஆராய்ந்தார். பெரும்பாலும் ஒரே நிறத்தில் அமைந்த இவ்வாய்வு முயற்சிகளில், உருவமும் தரையும், விண்வெளியும் உருவகமும், ஆகாயமும் கறையும் போன்ற முரண்களை ஒன்றிணைத்தலை நோக்கி அவர் தவிர்க்க முடியாமல் நகர்ந்தார்.

அதே நேரத்தில், சோபெல் கால்பந்து விளையாடும் இளம் ஆண்களையும் ஆவணப்படுத்தினார்— ஒளிப்பதிவனில் (camera) பிடிக்கப்பட்ட அசைவுகளை மங்கலான உருவங்களாக ஓவியத்தில் மாற்றினார்.

ஒருமுறை அவர்,
“நடவடிக்கையை மையமாகக் கொண்ட ஓவியத்துக்கும் அசைவுகளைப் பகுப்பாய்வு செய்ய முயலும் ஓவிய வகைக்கும் இடையே உள்ள வேறுபாடு மெல்லியதுதான்; ஆனால் அவ்வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது” என முணுமுணுத்தார்.

சுமார் 1950களில், ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் ஹார்க்னஸ் காமன்ஸ் (Harkness Commons) கட்டடத்திற்கு அருகில் உள்ள ரிச்சர்ட் லிப்போல்டின் (Richard Lippold) சிற்பமான உலக மரத்தில் (World Tree) வால்டர் குரோபியஸும் (Walter Gropius) 'தி ஆர்கிடெக்ட்ஸ் கொலாபரேட்டிவ்' (The Architects Collaborative) உறுப்பினர்களும்.

கீழே இருந்து கடிகாரமுள் திசையில்: வால்டர் கிரோபியஸ் (Walter Gropius), ராபர்ட் மெக்மிலன் (Robert McMillan), பெஞ்சமின் தாம்சன் (Benjamin Thompson), லூயிஸ் மெக்மில்லன் (Louis McMillen), நார்மன் ஃபிளெச்சர் (Norman Fletcher), ஜான் ஹார்க்னெஸ் (John Harkness)

பட மறுவுருவாக்கம், பெர்லினில் உள்ள பௌஹாஸ் காப்பகத்தின் கொடை.

ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் பண்பாட்டு வளமிக்க சூழலில் ஃபெர்னாண்டோ சோபெல் மகிழ்ச்சியடைந்தார். குறிப்பாக, புதுப்பாணியியல் ஓவியத்தில் வால்டர் கிரோபியஸ் (Walter Gropius) அறிமுகப்படுத்திய யோசனைகள் அவரை ஆழமாகக் கவர்ந்தன. கிரோபியஸ் 1937 முதல் 1952 வரை ஹார்வர்டின் கட்டடக்கலைத் துறையின் தலைவராக இருந்தார்.

| |
|---|
| அவர் ஜெர்மனியில் இருந்த பௌஹவுஸ் பள்ளியின் (Bauhaus School) நிறுவுநராகவும் செயலாற்றியிருந்தார். அக்கல்விக்கழகம் 20ஆம் நூற்றாண்டின் நகரமயமான, தொழிலியல் மயமான சூழலை ஓவியம், வடிவமைப்பு மற்றும் கட்டடக்கலை எவ்வாறு பிரதிபலிக்க முடியும் என்பதை ஆராய்ந்தது. |
| இச்சறுக்கேடுகள் (Slides) ஹார்வர்ட் பல்கலைக்கழக ஓவிய வரலாற்று வகுப்பான "அமெரிக்க ஓவியம்: புரட்சி முதல் நவீனக் காலம் வரை" என்ற பாடத்திட்டத்தில் பயன்படுத்தப்பட்டன.<br>சோபெல் 1949இல் இவ்வகுப்பில் சேர்ந்து, சறுக்கேடுகளில் காட்டப்பட்ட ஓவியப்படங்களைப் பார்த்து சில தோராயக் கோட்டோவியங்களை உருவாக்கினார். அவருடைய பாடக்குறிப்புப் புத்தகத்திலிருந்து சில பக்கங்களை அருகிலுள்ள காணொளியில் காணலாம்.<br><br>மின்னிலக்கமாக்கப்பட்ட நிழற்படச் சறுக்கேடுகள், காணொளியின் நீளம் உறுதிப்படுத்தப்பட உள்ளது<br><br>படம், ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் நுண்கலை நூலகத்தின் சிறப்புத் திரட்டுகளின் கொடையாகும் |
| ஃபெர்னாண்டோ சோபெல்<br>கிளாரினெட் (*Clarinet)* உடன் ஜிம் ப்ஃபொய்ஃபர் (*Jim Pfeufe)* உள்ள உருவப்பட ஓவியம் |

சுமார் 1953
மரத்தில் எண்ணெய் ஓவியம்

மாரியோ (Mario) மற்றும் மிமி க்யூ (Mimi Que) ஆகியோரின் திரட்டு

1946இல், சோபெல் பாஸ்டனில் உள்ள ஓவியர்களான ஜேம்ஸ் (“ஜிம்”) ப்ஃபொய்ஃபர் [James (“Jim”) Pfeufer] மற்றும் ரீட் சாம்பியன்–ப்ஃபொய்ஃபரைச் (Reed Champion-Pfeufer) சந்தித்தார். இவ்விணையர், அவரது ஓவியப் பயிற்சியின் தொடக்கத்தில், முறைசாரா முறையில் சொபெல்லுக்கு வழிகாட்டியாக இருந்தனர். பின்னர், 1954இல் ரோட் (Rhode) தீவின் வடிவமைப்புப் பள்ளியில் (RISD) ஓவியர் வாழிடம் (artist residency) பெற உதவியளித்தனர். RISDயில் இருந்தபோது, ஜிம் ப்ஃபொய்ஃபர் (Jim Pfeufer), சோபெல்லுக்குக் கல்லச்சுக்கலை (lithography) மற்றும் செதுக்கலுக்கான நுட்பங்களைக் கற்பித்தார்.

ஃப்ரான்ஸ் க்லைன் (Franz Kline)
(பிறப்பு 1910, அமெரிக்கா; இறப்பு 1962, அமெரிக்கா)
தலைப்பு இல்லை

1950
தொலைபேசிப் புத்தகக் காகிதத்தில் செயற்கை பாலிமர் நிறப்பூச்சு

கேன்பெராவில் (Canberra) உள்ள ஆஸ்திரேலியத் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
1980இல் வாங்கப்பட்டது

சோபெல் பெரும்பாலும் பிலிப்பைன்ஸ் மற்றும் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ஓவியர்களின் படைப்புகளைச் சேகரித்தாலும், வேறு நாடுகளைச் சேர்ந்த ஓவியர்களின் படைப்புகளையும் பெற்றிருந்தார்.

அமெரிக்க ஓவியர் ஃப்ரான்ஸ் க்லைன் (Franz Kline) உருவாக்கிய, எளிமைப்படுத்தப்பட்ட கறுப்பு–வெள்ளை சுருக்கவியல் ஓவியங்கள், சோபெல்லைக் கவர்ந்திருக்கலாம்.

1960களில், சோபெல் தன்னுடைய சொந்தக் கறுப்பு–வெள்ளை ஓவியத் தொடரான கறுப்புத் தொடரை (Serie Negra) உருவாக்கினார்.

அல்ஃபோன்சோ ஒசோரியோ (Alfonso Ossorio)
(பிறப்பு 1916, பிலிப்பைன்ஸ்; இறப்பு 1990, அமெரிக்கா)
#12 ’67 “Animula”

1967
கலப்பு ஊடகம் (Mixed media)

சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2024-00940

ஓவியர் அல்ஃபோன்சோ ஒசோரியோ (Alfonso Ossorio), சோபெல்லின் உறவினரும் நண்பருமாவார். சோபெல் போலவே, ஒசோரியோவுக்கும் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற எண்ண ஓட்டத்துடன் கூடிய வளர்ப்பு இருந்தது. எட்டு வயதுவரை பிலிப்பைன்ஸில் வாழ்ந்த அவர், பின்னர் இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் தனது கல்வியைத் தொடர்ந்தார். ஹார்வர்டு பல்கலைக்கழகத்திலும் ரோட் தீவின் வடிவமைப்புப் பள்ளியிலும் நுண்கலை (fine arts) பயின்றார்.

பல ஓவியர்களுக்கு ஆதரவளித்த ஒசோரியோ, ஜீன் டுபஃபெ (Jean Dubuffet), ஜாக்ஸன் போலக் (Jackson Pollock) மற்றும் லீ கிராஸ்னர் (Lee Krasner) ஆகியோரின் படைப்புகளைச் சேகரித்தார்.

அவர் சிறப்பாகச் செயலாற்றிய கலை வடிவங்கள் பலவாக இருந்தன—தெளிவுக்கூறுள்ள ஆழ்மன வெளிப்பாட்டியல் (surrealistic) வரைகலை, மெழுகுத் தடுப்பு (wax resist) ஓவியங்கள், சுருக்க வெளிப்பாட்டியல் ஓவியங்கள் என பல்வேறு பொருள்கள் அவரது திரட்டில் இருந்தன,

1954இல் மணிலாவில் ஒசோரியோவின் படைப்புகள் காட்சியிடப்பட்டபோது, சோபெல் அவர்களின் திரட்சிப் (assemblages) படைப்புகளை மிகுந்த மதிப்புடன்

எழுதிப் புகழ்ந்தார்—அவை “வியக்க வைக்கும், தொழில்நுட்ப அடிப்படையில் மூச்சடைக்க வைக்கும், முற்றிலும் கடினமானவை” எனச் சொன்னார்.

இங்குக் காட்சிப்படுத்தப்பட்டுள்ள தொகுபடைப்பு (*Congregation*) என்பது சோபெல்லுக்கென அர்ப்பணிக்கப்பட்டது; அவர்களுக்கிடையேயான நெருக்கமான கலைத்தன்மை வாய்ந்த நட்புறவை இது சான்றுரைக்கிறது.

தொகுப்புக் காட்சிப்பெட்டகப் பெயர்வில்லை

சோபெல் ஓர் அறிஞரும் ஆவார். அவர் ஸ்பானியக் குடியேற்றக் காலத்தில் (16ஆம்–19ஆம் நூற்றாண்டுகள்) உருவாக்கப்பட்ட பிலிப்பைன்ஸ் மதச்சிற்பங்களை ஆய்வு செய்தார். அவ்வாய்வின் அடிப்படையில் 1963இல் வெளிவந்த முக்கிய நூலான பிலிப்பைன்ஸின் மதம்சார் பிம்பம் (Philippine Religious Imagery) என்ற நூலை எழுதியுள்ளார்.

இக்காலப்பகுதியைச் சேர்ந்த மதச்சிற்பங்களை அவர் திரட்டியதோடு, பல அரசாங்க மற்றும் தனியார் கலைச்சேகரிப்புகளில் இருந்த சிறந்த எடுத்துக்காட்டுகளையும் வரைபடங்களாக உருவாக்கினார்.

இச்சிற்பங்கள், சோபெல்லின் புதுப்பாணியியல் ஓவியத் தேடல்களுக்கு ஒரு முக்கியமான உந்துதலாக அமைந்தன. குறிப்பாக, carroza எனப்படும்

| |
|---|
| மதபவனியில் பயன்படுத்தப்படும் ஊர்வலத் தேர் வடிவம், அவரை மிகவும் கவர்ந்தது. அவர் அதனை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு கலைவடிவங்களை உருவாக்கினார்—இதில் ஒரு கல்லச்சுக்கலைப்படமும் (lithograph), அவர் தனியே வடிவமைத்த சட்டகத்தில் நிறுவப்பட்ட 1953ஆம் ஆண்டு ஓவியமும் அடங்கும்.<br><br>அவ்வோவியம், பிலிப்பைன்ஸ் ஓவியச் சங்கம் நடத்திய வருடாந்தர ஓவியப்போட்டியில் முதல் பரிசை வென்று, சோபெல்லை பிலிப்பைன்ஸின் ஒரு குறிப்பிடத்தக்க ஓவியராக நிலைநாட்டியது. |
| டேவிட் கோர்டெஸ் மெடல்லா (David Cortez Medalla)<br>(பிறப்பு: 1942, பிலிப்பைன்ஸ்; இறப்பு: 2020, பிலிப்பைன்ஸ்) ஃபெர்னாண்டோ சோபெல் ஓவியம் பற்றிக் கற்பிப்பதும் ஒரு மாணவர் அதனைக் கேட்பதும்<br><br>1956<br>காகிதத்தில் பேனா மற்றும் மை<br><br>பிலிப்பைன்ஸ் பண்பாட்டு மையத்தின் திரட்டு<br><br>தனது ஓவியப் பயிற்சியைத் தாண்டி, சோபெல் ஓர் அறிஞர் என்ற முறையிலும் சிந்தனையாளர் என்ற முறையிலும் பிலிப்பைன் ஓவியக்கலையில் முக்கியப் |

| |
|---|
| பாதிப்பை ஏற்படுத்தினார். அவர் மணிலாவின் அத்தெனியோ பல்கலைக்கழகத்தில் "சமக்கால ஓவியத்திற்கான அறிமுகம்," "ஓவியத்தின் பாராட்டு," சீன மற்றும் ஜப்பானிய ஓவியங்கள் தொடர்பான பாடங்களைக் கற்பித்தார். அவரிடம் முறைசாரா நெறியில் (informal) படித்தவர்கள் உட்பட, அவரது மாணவர்கள், பிலிப்பைன் ஓவியத் துறையில் முக்கிய நபர்களாக உருவெடுத்தனர். அவர்களில் ஒருவரான டெஸ்ஸி ஒஜெடா-லூஸ் (Tessie Ojeda-Luz), அவரது கணவர், ஓவியர் ஆர்டுரோ லூஸுடன் (Arturo Luz) சேர்ந்து லூஸ் (Luz) கலைக்கூடத்தை நடத்தினார்; ஓவிய விமர்சகர்கள் ஆலிஸ் கோசெடெங் (Alice Coseteng), லியோனிடாஸ் பெனெசா (Leonidas Benesa) மற்றும் எம்மானுவேல் "எரிக்" டோரெஸ் (Emmanuel “Eric” Torres) ஆகியோரும் அவரது மாணவர்களே; கட்டடக்கலைஞர் லியாண்ட்ரோ லொக்சின் (Leandro Locsin), பின்னர் சர்வதேச அளவில் இயக்கவியல் (kinetic) ஓவியத்தின் முன்னோடியாக அறியப்பட்ட டேவிட் மெடல்லா (David Medalla) ஆகியோரும் அப்பட்டியலில் அடங்குவர். |
| பெல்லார்மைன் (Bellarmine) கூடம், மணிலாவின் அட்டீனியோ பல்கலைக்கழகம்<br><br>மணிலாவின் அட்டீனியோ பல்கலைக்கழக ஆவணக் காப்பகத்தின் படக்கொடை<br><br>1960 ஆம் ஆண்டு சோபெல்லின் சேகரிப்பில் இருந்த கலைப்படைப்புகளுடன் நிறுவப்பட்ட அட்டீனியோ கலைக்கூடம், மணிலாவின் அட்டீனியோ |

பல்கலைக்கழகத்தில் உள்ள பெல்லார்மைன் கூடத்தில் உள்ள ஓர் அறையில் முதலில் வைக்கப்பட்டது. இது பிலிப்பைன் புதுப்பாணியியல் ஓவியத்தின் முதல் அரும்பொருளகமாகும், மேலும் அதன் சேகரிப்பில் சோபெல் மற்றும் அவரது சகாக்களான ஹெர்னாண்டோ ஆர். ஒகாம்போ (Hernando R. Ocampo, Vicente Manansala), விசென்டே மனன்சாலா (Vicente Manansala), அனிதா மகசேசே-ஹோ (Anita Magsaysay-Ho), ரோமியோ தபுனா (Romeo Tabuena), லீ அகுனால்டோ (Lee Aguinaldo), ஆர்டுரோ லுஸ் (Arturo Luz), ஆங் கியுகோக் (Ang Kiukok), ஜோஸ் ஜோயா (Jose Joya) மற்றும் மானுவல் ரோட்ரிகஸ் சீனியர் (Manuel Rodriguez, Sr) ஆகியோரின் படைப்புகள் உள்ளன.

அதன் முதல் பொறுப்பாளர் கவிஞரும் விமர்சகருமான இம்மானுவேல் "எரிக்" டோரஸ் (Emmanuel “Eric” Torres) ஆவார். அவர் சோபெல்லின் முன்னாள் மாணவர் ஆவார், அவர் தனது பதவிக்காலத்தில் அட்டீனியோ கலைக்கூடத்திலுள்ள பிலிப்பைன் புதுப்பாணியியல் ஓவியத் தொகுப்பைத் தொடர்ந்து மேம்படுத்தி வந்தார்.

லியு குவோ-சங் (Liu Kuo-sung)
(பிறப்பு 1932, சீனா)
உயர்ந்த நெளிவரி (zig-zag)

1968

காகிதத்தில் மை மற்றும் வண்ணம்

தனியார் திரட்டு

கெயெழுது அழகெழுத்துக்கான வரலாற்று அடிப்படையிலான மற்றும் சமகால எடுத்துக்காட்டுகள், அதே போல் சீன மற்றும் ஜப்பானிய ஓவியக் கலைகளிலும் சோபெல் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். 1968 ஆம் ஆண்டு மணிலாவில் நடந்த லியு குவோ-சங் (Liu Kuo-sung) என்ற மை ஓவியரின் தனிக் கண்காட்சியில் இரண்டு ஓவியங்களை சோபெல் வாங்கினார், அதில் இப்படைப்பும் அடங்கும்.

ஃபெர்னாண்டோ சோபெல
அமைதியாக முனுமுனுத்தல்

தேதியற்றது
அரிசிக் காகிதத்தில் மை

ஓவியரின் பரிசு
மணிலாவின் அட்டீனியோ பல்கலைக்கழகத்தின் அட்டீனியோ கலைக்கூடத்தின் திரட்டு,

சோபெல் சொந்தமாக சில கையெழுது அழகெழுத்துப் (calligraphic) படைப்புகளை உருவாக்கினார். இவ்வோவியத்தில் உள்ள கதாப்பாத்திரங்கள் புரிந்துகொள்ள

முடியாததாக இருக்கலாம், சோபெல், கதாப்பாத்திரங்களின் அர்த்தத்தை விட ஒரு சுருக்கவியல் வடிவமாக கையெழுது அழகெழுத்தில் அதிக ஆர்வம் காட்டியதை இது குறிக்கிறது. மணிலாவின் அட்டீனியோ பல்கலைக்கழகத்தில் அவரது விரிவுரைகள் கையெழுது அழகெழுத்தை ஒரு சுருக்கவியல் ஓவிய வடிவமாக ஆய்வு செய்தன.

ஃபெர்னாண்டோ சோபெல்
பார்வை (*La Visión)*

1961
கித்தானில் எண்ணெய் ஓவியம்

லோபஸ் அரும்பொருளகம் மற்றும் நூலகத்தின் திரட்டு

“பார்வை” என்பது சோபெல்லின் கறுப்புத் தொடரின் ஒரு பகுதியாகும். தனது முந்தைய “சேட்டா” (Saeta) தொடரை அடிப்படையாகக் கொண்டு, சோபெல் பார்வைக்"கவனச்சிதறலை" அகற்றி, வண்ணங்களை கறுப்பு மற்றும் வெள்ளைக்கு மட்டுப்படுத்துவதன் மூலம் சுருக்கவியலை மேலும் உயர்த்துகிறார் - பிந்தையது நிறப்பூச்சிடாத கித்தானால் குறிக்கப்படுகிறது. கோடுகள், மங்கலான மற்றும் கோடிட்ட நிறப்பூச்சுடன் சேர்ந்து, இயக்கம் அல்லது அதிர்வுகளை வெளிப்படுத்துவதில் சோபெல்லின் ஆர்வத்தை

| | |
|---|---|
| எடுத்துக்காட்டுகின்றன.<br><br>1962 இல் வெனிஸில் (Venice) நடந்த ஈராண்டுமுறைக் கண்காட்சியில் (Biennale) ஸ்பானிஷ் மாடத்துக்கு அவர் அளித்த பங்களிப்பில் சோபெல் இப்படைப்பைச் சேர்த்துள்ளார். |
| ஃபெர்னாண்டோ சோபெல்<br>இளம்பெண்ணின் கனவு (II). லோரென்சோ லோட்டோவுடனான (*Lorenzo Lotto)* உரையாடல்.<br><br>1967<br>கித்தானில் எண்ணெய்<br><br>பில்பாவோ (Bilbao) நுண்கலை அரும்பொருளகத்தின் திரட்டு<br>1968 இல் பெறப்பட்டது<br><br>சோபெல் தனது சொந்த ஆய்வுகள் மற்றும் ஓவியங்களை உருவாக்க மறுமலர்ச்சி ஓவியர் லோரென்சோ லோட்டோவின் (Lorenzo Lotto) கற்பு பற்றிய உருவகத்தின் (*Allegory of Chastity)* (சுமார் 1505) பக்கம் திரும்பினார் - அஃது இப்பகுதியிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இங்கே, அவர் லோட்டோவின் கோர்ப்பைச் சுருக்கவியலில் வெளிப்படுத்துகிறார் : சோபெல்லின் படைப்பில் |

| |
|---|
| உள்ள வெள்ளைத் துளி, தரையில் சாய்ந்திருக்கும் கற்புக் கன்னியின் மீது புட்டோவால் தெளிக்கப்பட்ட பூக்களைக் குறிக்கிறது. அசல் ஓவியத்திலிருந்து மற்ற அனைத்தும் நிழலாகவும் பழுப்பு, கறுப்பு மற்றும் சாம்பல் நிறங்களின் மந்தமான நிறத்தொனிகளாகவும் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன.<br><br>"ஓவியம் ஒரு யோசனையை நினைவில் வைத்துக் கொள்ள எனக்கு உதவுகிறது. வரைதல் அதைச் சரிசெய்கிறது. ஆய்வு அதை உணர முயற்சிக்கிறது. இச்செயல்முறை நீக்குகின்ற ஒன்றாகும்: அது கவனச்சிதறல்களைத் தொடர்ந்து நீக்குகிறது. ஓவியம் ஆரம்ப யோசனையின் தெளிவான உணர்தலாக இருக்க வேண்டும்." என்று சோபெல் ஒருமுறை கூறினார். |
| ஸ்பெயின், மாட்ரிட் (Madrid), பிராடோ (Prado) அரும்பொருளகத்தின் உட்புறம், , , 2025<br><br>ஐரோப்பிய ஓவியர்களின் படைப்புகளில் உத்வேகத்தின் மூலங்களை ஆராய ஸ்பெயினின் மாட்ரிட்டில் உள்ள பிராடோ தேசிய அரும்பொருளகத்தைப் பார்வையிட சோபெல் விரும்பினார். உதாரணமாக, பிரான்சிஸ்கோ கோயாவின் (Francisco Goya) மே இரண்டாம் தேதி (1808) மற்றும் பிரான்சிஸ்கோ டி சுர்பரானின் (Francisco de Zurbarán) புனித பீட்டர், நோலாஸ்கோவின் பார்வை (*St Peter Nolasco)* (1629) ஆகியவற்றைப் பின்பற்றி அவர் படைப்புகளை உருவாக்கினார். பிராடோவில் சோபெல் பாராட்டிய மற்ற ஓவியர்களில் ஜுவான் வான் டெர் ஹேமன் (Juan van der Hamen), பீட்டர் பால் ரூபன்ஸ் (Peter Paul Rubens), எல் கிரேகோ |

| |
|---|
| (El Greco) மற்றும் டியாகோ வெலாஸ்குவெஸ் (Diego Velásquez) ஆகியோர் அடங்குவர். அவர்களின் ஓவியங்கள் அவரது சொந்தப் படைப்புகளுக்கான யோசனைகளை அவருக்கு வழங்கின, அதை அவர் முதலில் கித்தானில் எண்ணெய் வண்ணப்பூச்சில் வரைவதற்கு முன்பு தோராயக் கோட்டோவியமாக (sketch) வரைந்தார். |
| 1977 ஆம் ஆண்டு வான் க்ரோகம் (Van Grocum) வெளியிட்ட லாரன்ஸ் ஜே.போல் (Laurens J.Bol) எழுதிய அட்ரியன் கூர்ட்டேவின் உள் நடுத்தாள்<br><br>ஃபெர்னாண்டோ சோபெல் காப்பகம், நூலகம் மற்றும் ஆராய்ச்சி உதவி மையம், ஜுவான் மார்ச் (Juan March) அறநிறுவனம், மாட்ரிட்<br><br>சோபெல் நன்கு பயணித்தார், அரும்பொருளகங்களைப் பார்வையிடுவதை ரசித்தார், பெரும்பாலும் நேரில் பார்த்த கலைப்படைப்புகளை வரைந்தார். அவர் தனது விரிவான புத்தக நூலகத்தில் சந்தித்த ஓவியங்களையும் பாராட்டினார் மற்றும் பார்த்து வரைந்தார். உதாரணமாக, டச்சு ஓவியர் அட்ரியான் கூர்ட்டின் (Adriaen Coorte) அஸ்பாரகஸுடன் (*Asparagus)* கூடிய நிலைப்பொருள் (still life) ஓவியத்துக்குப் [1697, ஆம்ஸ்டர்டாமில் (Amsterdam) உள்ள ரிஜ்க்ஸ் (Rijksmuseum) அரும்பொருளகத்தின் திரட்டு] பிறகு அவர் வரைந்த ஓவியங்கள், அசல் கலைப்படைப்பை நேரில் பார்ப்பதற்குப் பதிலாக, இந்தப் புத்தகத்தில் உள்ள ஓவியத்தின் படத்தைப் பார்ப்பதன் மூலம் வரையப்பட்டிருக்கலாம். |

| |
|---|
| சோபெல்லின் நூலகத்திலிருந்து புத்தகங்கள் மாட்ரிட்டில் உள்ள ஜுவான் மார்ச் (Juan March) அறநிறுவனத்துக்கும் மணிலாவில் உள்ள அட்டீனியோ கலைக்கூடத்திற்கும் நன்கொடையாக வழங்கப்பட்டன. |
| ஃபெர்னாண்டோ சோபெல<br>கைகழுவு தொட்டிகளின் (Sinks) மேல் தன்-உருவப்படம்<br><br>சுமார் 1950கள்<br><br>அட்டைப் பலகையில் பொருத்தப்பட்ட புகைப்படம்<br><br>ஜெய்ம் (Jaime) மற்றும் அயலாவின்  பீட்ரிஸ் சோபெல் (Beatriz Zóbel) அளித்த பரிசு பரிசு<br>அயலா கழகத்தின் திரட்டு<br>அயலா அரும்பொருளகத்திற்குக் கடனாக அளிக்கப்பட்டது<br><br>ஐரோப்பாவில் தங்கியிருந்தபோது சோபெல்லின் புகைப்படங்கள் முதன்முதலில் 1956 இல் மணிலாவில் உள்ள பிலிப்பைன்ஸ் கலைக்கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டன. சுருக்கவியல் ஓவியத்தின் மீதான அவரது முழு ஈடுபாட்டை வடிவமைப்பதில் அவரது புகைப்படம் எடுத்தல் ஆய்வு மிக முக்கியமானது, "புகைப்படத்தை முறையாகப் பாதுகாக்கும் திறன், ஓவியத்தின் |

| |
|---|
| வளங்களை விட மிக உயர்ந்தது என்று நான் உணர்ந்தேன். நான் வரைய வேண்டிய கட்டாயத்தில் உணர்ந்தேன், ஆனால் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய அவசியத்தை நான் கைவிட்டேன்" என்று அவர் கூறினார். |
| ஃபெர்னாண்டோ சோபெல<br>கால்பந்து 14<br><br>1973<br>கித்தானில் எண்ணெய் ஓவியம்<br><br>தனியார் திரட்டு<br><br>சோபெல் ஒரே விஷயத்தை பலமுறை ஆராய்ந்து, கோர்ப்பு, ஊடகம் மற்றும் வண்ணத்தில் மாறுபாடுகளுடன் ஆய்வு முயற்சிகளைச் செய்தார். அவரது கால்பந்துத் தொடரானது புகைப்படக்கலை, தோராயக் கோட்டோவியங்கள் (sketch), அச்சீடுகள் (prints) மற்றும் ஓவியங்கள் மூலம் வீரர்களின் இயக்கத்தைப் படம் பிடிக்கிறது, அடையாளம் காணக்கூடிய படங்கள் முதல் சுருக்கவியல் இயக்கம் வரை அவை உள்ளன. |
| சோபெல், குவெங்காவில் (Cuenca) புகைப்படம் எடுத்தலைத் தொடர்ந்து பயிற்சி செய்து வந்தார், அதை ஓவியத்தின் மற்றொரு வடிவமாகக் கருதினார். அவர் ஓவியம் வரைதல் மற்றும் புகைப்படம் எடுத்தல் இரண்டையும் நினைவக |

| |
|---|
| சாதனங்களாகப் பயன்படுத்தினார்; அவை அவருக்கு யோசனைகளை நினைவில் வைத்துக் கொள்ளவும், குறிப்பிட்ட படங்களின் மீதான அவரது ஆரம்ப ஈர்ப்பைப் பதிவு செய்யவும் உதவின. எதிர்காலப் படைப்புகளாக உருவாக்கப்படுவதற்கான திறனை அவர் உணர்ந்ததால், அவர் தனது தோராயக் கோட்டோவியங்கள் (sketch) மற்றும் புகைப்படங்களை உன்னிப்பாகச் சேமித்து வைத்தார். |
| ஃபெர்னாண்டோ சோபெல்<br>காட்சி XXVI<br><br>1974<br>கித்தானில் எண்ணெய் மற்றும் கிராஃபைட் (graphite)<br><br>ஜுவான் மார்ச் (Juan March) அறநிறுவனத்தின் திரட்டு, ஜுவான் மார்ச் அறநிறுவன அரும்பொருளகம், பால்மா (Palma)<br><br>1978 ஆம் ஆண்டு ஒரு நேர்காணலில், சோபெல் தனது “காட்சி” தொடர் ஓவியங்களை எவ்வாறு உருவாக்கினார் என்பதை விளக்கினார்:<br><br>“காட்சி” எனது ஜன்னல் வழிக் காட்சியை அடிப்படையாகக் கொண்டது. நான் அதைப் பார்க்கும்போது, எனக்கு உண்மையில் ஆர்வமில்லாத அனைத்து |

வகையான விஷயங்களையும் நான் காண்கிறேன்: வீடுகள், சாலைகள், நிறங்கள், பறவைகள் போன்றவை அவை. அவற்றை நீங்கள் காட்சியின் சிறுநிகழ்வுகள் (anecdotes) என்று அழைக்கலாம். எனவே, எனக்கு உண்மையில் ஆர்வமாக இருப்பது எது? கண்டுபிடிப்பது ஓர் ஓவியத்தின் வரலாற்றை உருவாக்குகிறது. ஓவியச் செயல்முறை என்பது நீக்குதல் தன்மை கொண்டது; சிறுநிகழ்வுகள் மற்றும் பிற கவனச்சிதறல்களை நீக்குதலே ஓவியச் செயல்முறை ஆகும். வீடுகள், மரங்கள், சாலைகளை நீக்கும் போது, காட்சி பெருகிய முறையில் எனது பார்வையாக மாறுவதைக் காண்கிறேன். நான் இன்னும் அதிகமாக நீக்குகிறேன்; உள்ளூர் நிறத்தை நான் நீக்குகிறேன், ஏனெனில் அஃது என்னை ஒரு நேரத்தின் ஒரு கணத்துடன் இணைக்கிறது. இறுதியாக, அவைகளையெல்லாம் நீக்கியபின் ஓர் அமைப்பு மற்றும் ஒரு குறிப்பிட்ட ஒளியைத் தவிர வேறு எதுவும் இல்லை. ஓவியத்தின் ஒளி, ஒரு நேரத்தின் ஒரு கணத்தின் ஒளி அன்று. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், என் நினைவில் இருக்கும் என் பார்வையைத் தவிர வேறு எதுவும் இல்லை. இங்கேதான் விந்தையான பகுதி வருகிறது. என் நினைவுக்கு வடிவம் கொடுப்பதில் நான் வெற்றி பெற்றால், பார்வையாளரின் நினைவுக்கும் நான் வடிவம் கொடுத்திருப்பதைக் காண்கிறேன். அஃது அவர்களுடைய பார்வையாகவும் என்னுடைய பார்வையாகவும் மாறுகிறது.

கார்லோஸ் சௌரா (Carlos Saura)
(பிறப்பு 1932, ஸ்பெயின்; இறப்பு. 2023, ஸ்பெயின்)

குவென்கா (Cuenca)

1958
மின்னிலக்கக் காணொளியாக மாற்றப்பட்ட திரைப்படம்
39 நிமிடம் 5 வினாடி

ஓவியர் அன்டோனியோ செளராவின் (Antonio Saura) சகோதரரான புகழ்பெற்ற ஸ்பானிஷ் திரைப்படத் தயாரிப்பாளர் கார்லோஸ் செளரா (Carlos Saura), குவென்கா நகரத்தைப் பற்றிய இந்த ஆவணப்படத்துடன் தனது திரைப்பட வாழ்க்கையைத் தொடங்கினார். செளரா தனது வழிகாட்டியான ஸ்பானிஷ் ஆழ்மன வெளிப்பாட்டியலாளர் (surrealist) லூயிஸ் புனுவல் (Luis Buñuel) இயக்கிய 1933 ஆம் ஆண்டு வெளியான “ரொட்டி இல்லாத நிலம்” (Land without Bread) திரைப்படத்திலிருந்து ஊக்கம் பெற்றார்.